## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், முதுகுளத்தூர்.

**O.S.No.69 /2018**

2021ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 30ம் நாள் வாதி / பிரதிவாதி தரப்பில் சாட்சி வாக்குமூலம் 1983ம் ஆண்டு 1வது விதியின் ஏற்பாட்டின்படி இந்நீதிமன்ற உதவியாளரால் பிரமாணம் செய்யப்படுகிறது. உறுதி செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ராமர் | தாலுகா | : முதுகுளத்தூர் |
| த/ பெயர் | : சித்திரவேலுத்தேவர் | கிராமம் | : வி.வலசை |
| க/ பெயர் | : | | |
| வயது | : 35 | மதம் | : இந்து |
| தொழில் | : விவசாயம் | ஜாதி | : தேவர் |

<u>வா.சா.</u> 2
நாள் : 30.09.2021
<u>முதல் விசாரணை ஆரம்பித்த நேரம் 13.15 p.m</u>

நான் இவ்வழக்கின் 3ம் தரப்பினர். வாதி தரப்பு சாட்சி 2ஆக நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். நான் சொன்ன விபரத்தின் அடிப்படையில் தான் நிரூபண வாக்குமூலம் தயார் செய்யப்பட்டது. படித்துப் பார்த்து கையொப்பம் செய்தேன். அதிலுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மையே. தாவா சொத்திற்கு வடக்குப் பக்கமுள்ள எனது சொத்தின் பட்டா 10(1) கணிணி நகல் தாக்கல் செய்கிறேன். அது ~~நீ.ம~~ Bn.சா.ஆ.1(Ex.X1)ஆக குறியீடு செய்யப்பட்டது.

விசாரணை முடிந்த நேரம் 13.20 P.M

குறுக்கு விசாரணை இல்லை.

ராமர்

Taken down by me in open Court read over to this witness and admitted by him to be Correct.

30/9/2021
District Munsif
Mudukulathur

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்

முதுகுளத்தூர்.

O.S, நம்பர்: 69 / 2018

அய்யாக்கண்ணு --- வாதி

[எதிர்]

சிலையக்காள் --- பிரதிவாதி

**ஷை வாதி தரப்பில் சி.பி.சி. ஆர்டர் 18, ரூல் 4(1)-ன் கீழ் பணிவுடன் சமர்ப்பிக்கப்படும் PW -2ன் முதல் விசாரணை அபிடவிட்டு**

இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர் வட்டம், வி.வலசை கிராத்திலிருக்கும் சித்திரவேலுத்தேவர் மகன் இந்து, விவசாயம், சுமார் 35 வயதுள்ள ராமர் உண்மைப் பிரமாணத்தின் மீது எழுதி வைத்துள்ள முதல் விசாரணை அபிடவிட்டு.

1. நான் இந்த வழக்கில் வாதி தரப்பு 2வது சாட்சியாவேன்.

2. தாவாச் சொத்துக்கள் ஆதியில் இருளத்தேவருக்குப் பாத்யமானதாகும். ஷை இருளத்தேவர் காலத்திற்கு பின்பு ஷையாரின் மகனான இராமுத்தேவர் பாத்தியம் அடைந்து அனுபவம் செய்து வந்தார். ஷை இராமுத்தேவரின் காலத்திற்கு பின்பு இன்று வரை தாவாச் சொத்தினை பாத்யம் அடைந்து வாதி தான் அனுபவம் செய்து வருகிறார். பிரதிவாதி தாவாச் சொத்தினை ஒருபோதும் அனுபவம் செய்ததது கிடையாது. தாவாச் சொத்திற்கு வடக்கு எனக்கு சொந்தமான நிலத்தை நான் அனுபவம் செய்து வருகிறேன். அதனால் ஷை விபரம் அனைத்தும் எனக்கு நன்கு தெரியும்.

3. எனது சாட்சியத்தை நிரூபிக்க தாவாச் சொத்திற்கு வடக்கு பக்கம் உள்ள எனது சொத்தின் பட்டாவை இத்துடன் தாக்கல் செய்கிறேன்.

ஆகையால் சமூகம் அவர்கள் கிருபை செய்து தாக்கல் பிராதுப்படி உத்திரவு செய்ய வேண்டி பணிவுடன் பிரார்த்திக்கப்படுகிறது.

ராமர்

வாதி தரப்பு 2வது சாட்சி

மேலே கண்டவைகள் யாவும் உண்மையென்று உறுதி கூறி என் முன் முதுகுளத்தூரில் 30.09.2021ல் கையொப்பமிட்டார்.